மாண்புமிகு திரு. கி. மனோகரன்: நான் 'வரும் வரைக்கும்' என்று சொல்லும்போது, அருமை நண்பர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள், இன்னும் பல ஆண்டுக்காலம் ஆகுமோ என்ற அச்சத்திலே இப்படி கேட்டிருக்கக்கூடும் என்று கருதுகிறேன். விரைவிலே அறிவிக்கப்படும். விரைவிலே என்றால் எத்தனை நாள், எத்தனை மாதம் என்று கேட்கக்கூடும். அதற்கு நான் சொல்வது ஒரு வாரத்திற்குள்ளே அறிவிக்கப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

5. ஒத்திவைப்புத் தீர்மானங்களும் மேலவை விதி 57-ன்கீழ் விவாதமும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திரு. ஏ. நல்லசிவம், திரு. கே. எஸ். அப்துல் வகாப், திரு. கே. இராமமூர்த்தி ஆகியோர் மேலவை விதி 43-ன்கீழ் பல்வேறு பொருள்கள் குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளார்கள். திரு. ஜி. வசந்தபை அவர்கள் ஒரு மணி நேர விவாதத்திற்கு மேலவை விதி 57-ன்கீழ் ஒரு முன்னறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இப் பொருள்கள்பற்றி மேலவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் உறுப்பினர்கள் பேச நிறைய வாய்ப்பு இருப்பதால் இவைகளுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவர் அவர்களே, இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற நிகழ்ச்சிகளைப்பற்றிப் பேசுவதற்கும் அரசாங்கத்தினுடைய கவனத்தை ஈர்ப்பதற்கும்தான் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நாம் சபையின் மரபைக் காக்க வேண்டும்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: நமது மரபுப்படிதான் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் அவர்களும் பேனல் சேர்மனாக இருந்திருக்கிறார்கள். பலமுறை கஷ்டப் பட்டிருக்கிறார்கள். தலைவர் தீர்ப்புக்குப் பிறகு எதுவும் பேச வேண்டாம்.

6. அறிவிப்பு.

(1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தமிழக சட்ட மன்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் 31-8-78 அன்று காலை பத்து மணியளவில் கூடி கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலைத் தயாரித்துள்ளது:—

31-8-1978	..	ஆளுநர் உரையின் மீது விவாதம்
1-9-1978	..	ஆளுநர் உரையின் மீது விவாதம்
2-9-1978	..	ஆளுநர் உரையின்மீது விவாதம்

1978 ஆகஸ்ட் 31] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

3-9-1978 முதல்		
6-9-1978 வரை		கூட்டம் இல்லை
7-9-1978	..	ஆளுநர் உரையின் மீது விவாதம்
8-9-1978	..	முதல் துணை மதிப்பீடு அறிக்கை அளித்தல்
		ஆளுநர் உரைக்கு பதில்
9-9-1978	..	முதல் துணை மதிப்பீடு அறிக்கைமீது விவாதம்
10-9-1978	..	விடுமுறை
11-9-1978	..	தனியார் அலுவல்கள்
12-9-1978 முதல்		
14-9-1978 வரை		அரசினர் சட்ட முன்வடிவுகள்

சட்ட மன்ற மேலவை 1-9-1978 முதல் மாலை 4 மணி முதல் 7 மணி வரை பிரதி தினமும் கூடும்.

(2) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்களுக்கான முன்னறிவிப்பு.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள் ஏற்கனவே உறுப்பினர்களுக்குத் தெரிவித்துள்ளபடி 1978 செப்டம்பர் 1 ஆம் நாள், வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு முன்னதாக செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

7. மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 6-வது விதியின்கீழ் மேலவையின் 54-வது கூட்டத் தொடருக்கு கீழ்க்காணும் உறுப்பினர்களை, மேலவை மாற்றுத் தலைவர் பட்டியலில் இடம் பெறுமாறு நான் நியமித்துள்ளேன்.

1. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்
2. திரு. க. இராமமூர்த்தி
3. திரு. கே. எஸ். அப்துல் வகாப்
4. திருமதி சி. தமிழரசி